




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 269 | 23.03.2026 | MONDAY | PANGUNI: 9 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 269 | 23.03.2026 | திங்கள்கிழமை | பங்குனி : 9 | விலை : ரூ.5/- |


## 7,712 விடியல் பேருந்துகள்

# "897.82 கோடி விடியல் பயணங்கள்"

## முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை: மார்ச்.23-

விடியல் பயணம் புதிய எதிர்காலத்தை எழுதிய முதல் கையெழுத்து எனவும், திராவிட மாடலில் 7,712 விடியல் பேருந்துகள் மூலம் மொத்தம் 897.82 கோடி விடியல் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'விடியல் பயணம் புதிய எதிர்காலத்தை எழுதிய முதல் கையெழுத்து. திராவிட மாடலில் 7,712 விடியல் பேருந்துகள் இயக்கப்படுகிறது. மார்ச் 1 வரையில், 2021-22 95.86 கோடி, 2022-23 166.53 கோடி, 2023-24 186.35 கோடி, 2024-25 213.94 கோடி, 2025-26 235.14 கோடி என மொத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள விடியல் பயணங்கள் 897.82 கோடி.




பாதுகாப்பான, சுதந்திரமான பயணங்களால் மகளிர் முன்னேற்றத்தில் புதிய உயரங்களை எட்டியிருப்பதோடு, ஆண்டுக்கு ஆண்டு விடியல் பயணங்கள் தொடர்ந்து உயர்ந்துகொண்டே போவது இந்தத் திட்டத்தின் வெற்றியைப் பறைசாற்றுகிறது.

மகளிர் மட்டுமல்ல, திருநர்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோரும் இத்திட்டத்தில் பயன்பெறுகின்றனர். இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழ்நாட்டில் நாம் செயல்படுத்திய இந்தத் திட்டம், அடுத்தடுத்து எல்லா மாநிலங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கிவிட்டது. யார் வந்தாலும் மாற்ற முடியாது என்ற நிலையை அடைந்திருக்கிறது. திராவிட மாடல் 2.0வில் இந்தத் திட்டம் இன்னும் மேன்மையடையும். இது ஸ்டாலின் ஸ்டேட்மெண்ட்." என்று தெரிவித்துள்ளார்.

## புதுச்சேரியில் போட்டியிடும் 2 அதிமுக வேட்பாளர்களை அறிவித்தார் பழனிசாமி!

சென்னை: மார்ச்.23-

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர்களை அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.





இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மன்றக் குழு பரிசீலித்து எடுத்த முடிவின்படி, 9.4.2026 அன்று நடைபெற உள்ள புதுச்சேரி மாநில சட்டப்பேரவை பொதுத் தேர்தலில், அதிமுகவின் அதிகாரப்பூர்வ வேட்பாளர்களாகக் கீழ்க்கண்டவர்கள் கீழ்க்காணும் சட்டமன்றத் தொகுதிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு நிறுத்தப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உப்பளம் தொகுதியில் புதுச்சேரி மாநிலக் கழகச் செயலாளர் ஏ. அன்பழகன் மற்றும் உருளையன்பேட்டையில் புதுச்சேரி மாநிலக் கழக முன்னாள் துணைச் செயலாளர் ஏ.காந்தி ஆகியோர் போட்டியிடுவார்கள்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## காரைக்கால் தெற்கு பாஜக வேட்பாளராக அருள்முருகன் அறிவிப்பு!

புதுச்சேரி: மார்ச்.23-

புதுச்சேரியில் பாஜக போட்டியிடும் 10வது தொகுதியான காரைக்கால் தெற்கு வேட்பாளராக அருள்முருகன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

புதுச்சேரியில் என்டிஏ கூட்டணியில் என்ஆர்காங்கிரஸுக்கு 16 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. மீதமுள்ள 14 தொகுதிகளில் 10 தொகுதிகள் பாஜகவுக்கும், அதிமுக, லஜகவுக்கு தலா 2 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டன. அதையடுத்து பாஜக 9 தொகுதி வேட்பாளர்களை அறிவித்தது. பத்தாவது தொகுதியான காரைக்கால் தெற்கு வேட்பாளராக மாநில தலைமை செய்தி தொடர்பாளர் அருள்முருகனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய பொதுச்செயலர் அருண்சிங் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதைத்தொடர்ந்து அருள்முருகனுக்கு கட்சியின் அதிகாரப்பூர்வ தேர்தல் படிவங்களை இன்று அளித்தனர்.

என்டிஏ கூட்டணியில் அறிவித்து பத்து தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அதிகாரப்பூர்வமாக பாஜக மட்டுமே அறிவித்துள்ளது. இதில் அறிவிப்புக்கு முன்பாகவே அமைச்சர் நமச்சிவாயம், பேரவைத்தலைவர் செல்வம் உள்ளிட்டோர் மனுதாக்கல் செய்துவிட்டனர். மீதமுள்ளோர் நாளை மனுதாக்கல் செய்கின்றனர்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, எழும்பூர் மற்றும் திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொதுப் பார்வையாளர் திரு. ஜி.ஸ். சஹோடா, எழும்பூர் சென்னை மேல்நிலைப் பள்ளியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்படவுள்ள பாதுகாப்பு அறையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது எழும்பூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.சுரேஷ் மற்றும் அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.

## "சிபிஎம் 5 தொகுதிகளை ஏற்க முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்" : பெ.சண்முகம்

சென்னை: மார்ச்.23-

"திமுக கூட்டணியில் அதிகம் கட்சிகள் இருப்பதால், தொகுதிகள் ஒதுக்குவதில் சிரமம் உள்ளதாக முதல்வர் தெரிவித்தார். மேலும், 5 தொகுதிகள் என்ற எண்ணிக்கையை சிபிஎம் ஏற்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். இது குறித்து மாநிலக்குழு கூடி விவாதித்து பதில் சொல்வதாக முதல்வரிடம் கூறினோம்." என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் எனத் தெரிவித்தார்.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலினை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் கூறியதாவது: மதசார்பற்ற ஜனநாயக கூட்டணியில் சிபிஎம் தொடந்து பயணித்து வருகிறது. 2026 சட்டப்பேரவைத் தேர்தலிலும் திமுக கூட்டணியில் நீடிப்போம். இதுகுறித்து திமுக தலைமையிலான பேச்சுவார்த்தைக் குழுவுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

எங்கள் மாநிலக்குழுவின் கூட்டம் நேற்று நடந்து முடிந்தது. திமுக கூட்டணியில் புதிய கட்சிகள் இணைந்துள்ளதால், ஏற்கெனவே போட்டியிட்ட 6 தொகுதிகள் என்ற எண்ணிக்கையைவிட கூடுதலாக தொகுதிகளை வலியுறுத்த வேண்டாம், 6 தொகுதிகளில் உடன்பாடு செய்யலாம் என எங்கள் மாநிலக்குழு தெரிவித்தது. அதற்கான முயற்சிகளை எடுக்க மாநிலக்குழு எங்களை அறிவுறுத்தியது.

இதனைத் தொடர்ந்து இன்று முதல்வரிடம் பேசினோம். அப்போது கூட்டணியில் அதிகம் கட்சிகள் இருப்பதால், தொகுதிகள் ஒதுக்குவதில் சிரமம் உள்ளதாக முதல்வர் தெரிவித்தார். அப்போது, 5 தொகுதிகள் என்ற எண்ணிக்கையை சிபிஎம் ஏற்க வேண்டும் என முதல்வர் கேட்டுக்கொண்டார். ஆனால், 6 என்ற எண்ணிக்கைக்கு தான் மாநிலக்குழு அனுமதி வழங்கியுள்ளது. எனவே 5 தொகுதிகள் குறித்து மாநிலக்குழு கூடி விவாதித்து பதில் சொல்வதாக முதல்வரிடம் கூறினோம்.

5 தொகுதிகள் என்ற எண்ணிக்கைக்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும், சாதகமான பதிலைச் சொல்ல வேண்டும் எனவும் முதல்வர் வேண்டுகோள் விடுத்தார். இனி, எங்கள் மாநிலக் குழு கூடி இதுபற்றி விவாதித்து, இன்று மாலையோ அல்லது நாளையோ முடிவை அறிவிப்போம். " என்றார்.

## "நான் ஆசியாவின் பக்கம்" மேற்காசிய போர் குறித்து கமல்ஹாசன் கருத்து

சென்னை: மார்ச்.23-

அமெரிக்கா இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் குறித்து மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தனது கருத்தை தெரிவித்துள்ளார். இது குறித்து சமூக வலைதளப் பதிவில் அவர் பதிவிட்டுள்ளார். அதில் கூறியுள்ளதாவது:



"செம்மஞ்சள் பிழம்பு. எண்ணெய்க் கிடங்குகள் வெடித்து ஆரஞ்சு அக்னி மேகமாய்க் கொப்பளிக்கும் யூடியூப் வீடியோ பார்த்து 'அடேங்கப்பா! போட்டாம் பாரு' என்று, யாரோ கிரிக்கெட்டில் சிக்ஸர் அடித்தது போல் ஆர்ப்பரிப்பவரிடம், நீங்கள் எந்தக் கட்சி அமெரிக்காவா, ஈரானா? என்ற கேள்விக்கு, 'நான் இந்தியன், நான் பார்வையாளன்' என விம்முகிறார்.

இந்தியா தீவல்ல ஆசியத் துணைக்கண்டம் என்று புரியவைக்கும் என் வாக்கியம் முடியும் முன், 'நான் ஹிந்து. இது ஹிந்துஸ்தான். இந்தப் பெயரை ஒத்துக்கொண்டு சூட்டியது இஸ்லாமிய முகலாய மன்னர்' என்று அந்த நண்பர் இடைமறிக்கிறார்.

முகலாய முஸ்லீமை, மன்னர்களை, 500 ஆண்டுகள் ஏற்றுக்கொண்ட பெரும்பான்மையைச் சேர்ந்த இவர்கள் நிச்சயமாக சத்ரபதி சிவாஜியின் நேரடி வாரிசுகளல்லர்; நாளை இந்திய எண்ணெய்க் கிடங்கிற்கு வரப்போகும் ஆபத்து புரியாதவர்கள். அவர் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் மதம், என்னை வியப்பில் ஆழ்த்தவில்லை. அவர் அறியாமையை வியப்பதோடு, அது என்னைப் பதற்றத்திற்கும் உள்ளாக்குகிறது.

நடந்துகொண்டிருக்கும் இந்தப் போர், நாளை வலுத்துவிட்டால் இவர்கள் தன் மிடில் கிளாஸ் பங்கரில் ஒளிந்துகொண்டு (கீமிதிமி வேலை செய்யும் வரை), 'ஆட்சியாளர் என்ன செய்கிறார்? என் ராணுவம் என்ன செய்கிறது?' என ட்வீட்டிவிட்டு, ஏதாவது லாரி டயர் வெடித்தால்கூட பயந்து பதுங்கப் போய்விடுவார்கள்.

நம் ராணுவ வீரர்கள் பலர் வீண் போரில் மடிந்த பின் 'சாரே ஜஹான்ஸே' பாட, மலர் வளையத்துடன் மனித நேயர்கள் என்ற விலாசத்துடன் தலைகாட்டுவார்கள். பாமரர்களும் பாதசாரிகளும் உழைப்பவர் வர்க்கமும், பெரும் கார்ப்பரேட் வியாபாரிகள் போல் எவன் எக்கேடு கெட்டால் என்ன என்று லாப நாமாவளி பாடிவிடக் கூடாது.

ஊரான் வீடு பற்றி எரியும் போது தீயணைக்க உதவுவது தியாகம் அல்ல, மனித நேயம். அதையும் தாண்டி, வாழும் வீதியோ ஊரோ பற்றியெரியக் கூடாது என்ற அடிப்படைத் தற்காப்பு. அரபு எண்ணெய்க் கிடங்குகளின் வாயு நம் அடுப்புக்கும் வாகனங்களுக்கும் உதவுகிறது.

கிலாஃபத் இயக்கம் என்று பேசிய போது காந்தியாரைக் கிண்டலடித்தவர்களின் பேரப்பிள்ளைகள் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறார்கள். அவர்கள் நீடூழி வாழட்டும். கூடவே ஈரானும் ஊரானும் வாழட்டும்.

அடுத்த முறை ஆரஞ்சுப் பிழம்பு பார்க்கத் துடிப்பவர்களுக்கு தீபாவளியே போதுமானது. அதையும் தாண்டி அடுத்த மாத நெல் விதைப்புக்கான உரம் பற்றியும், அதற்கு அடுத்த வருடம் பற்றியும் சிந்திக்க வேண்டும். உலகுக்குத் தேவையான 70 விழுக்காடு உரம், ஃபாஸ்ஃபேட் எல்லாம் சீனாவிலும் சில வளைகுடா நாடுகளிலும் முடங்கிக் கிடக்கின்றன. பெட்ரோலியம், உரமோ பாசனமோ செய்ய பெரிதாக உதவாது. நம் உழவருக்கு மட்டுமல்ல அமெரிக்க உழவனுக்கும்தான்.

ஊடகத்தில் கிண்டல் மட்டும் அடிக்கும் அறியாமை, போருக்கோ நாட்டிற்கோ உதவாது. 'போர் செல்லும் வீரன் ஒரு தாய் மகன்தான். நம்மில் யார் இறந்தாலும் ஒரு தாய் அழுவாள்' (விஸ்வரூபம் படத்தில் நான் எழுதிய பாடல்) அது இந்தியத் தாயாக இருக்கவே கூடாது. நான் ஆசியாவின் பக்கம். வாழ்க இந்தியா" என்று தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 28ம் தேதி அன்று ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் இணைந்து கூட்டு தாக்குதல் நடத்தின. அதற்கு பதிலடி தரும் வகையில் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்காவின் ராணுவ தளங்கள் மற்றும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மேற்காசியாவில் போர் மூண்டு, கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பல்லடம் காவல் நிலைய எல்லையில் 11 கிராம் ஹெராயின் பறிமுதல்

திருப்பூர், மார்ச். 23-

21.03.26 அன்று திருப்பூர் மாவட்டம் பல்லடம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பல்லடம் பேருந்து நிலையம் அருகில், பீகார் மாநிலத்தைச் சேர்ந்த Bhushankumar (24) என்பவர் 11 கிராம் ஹெராயினை சட்டவிரோதமாக வைத்திருந்தது தொடர்பாக போலீசார் கைது செய்தனர்.

முதற்கட்ட விசாரணையில், சட்டவிரோதமாக மேற்படி ஹெராயினை பீகார் மாநிலத்திலிருந்து வாங்கப்பட்டதாகவும், குற்றவாளி இருதினங்களுக்கு முன்பு திருப்பூருக்கு வந்ததாகவும் தெரியவந்தது.

மேற்படி நபர் மீது பல்லடம் காவல் நிலையத்தில் NDPS சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரை மாண்பமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற காவலில் திருப்பூர் மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டார்.

திருப்பூர் மாவட்ட காவல்துறை, போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனைக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது, மேலும் போதைப்பொருள் தொடர்பான தகவல்கள் இருப்பின் பொதுமக்கள் உடனடியாக காவல்துறையிடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

# தென்மாவட்டங்களில் திமுக கூட்டணி வெற்றிக்கு உறுதுணையாக இருப்போம்

## தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்க மாநில தலைவர் கிருபாகரன் மாவட்ட நிர்வாகி கூட்டத்தில் அறிவிப்பு

சின்னாளபட்டி, மார்ச். 23-

தென்மாவட்டங்களில் திமுக கூட்டணி வெற்றிக்கு உறுதுணையாக இருப்போம் என்று தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்க மாநில தலைவர் கிருபாகரன் மாவட்ட நிர்வாகி கூட்டத்தில் அறிவித்ததுடன், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 தொகுதிகளிலும் திமுக தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றி பெறும் என்றார்.



திண்டுக்கல் மாவட்ட தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் அக்ஷயா நகரில் உள்ள தலைமை கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நிறுவன தலைவர் எஸ்.கிருபாகரன் தலைமை தாங்கினார். மாநில பொதுச் செயலாளர் வி.அருண்குமார், மாநில பொருளாளர் கே.சௌந்திரராஜன், மாநில வழக்கறிஞர் பிரிவு செயலாளர் வீரபாண்டியன், திண்டுக்கல் மாவட்ட செயலாளர்கள் செல்வம் (கிழக்கு), நவீன்குமார் (மேற்கு), மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆத்தூர் ஒன்றிய பொறுப்பாளர் காமேஷ் வரவேற்று பேசினார்.

கூட்டத்தில் நிர்வாகிகள் மத்தியில் பேசிய நிறுவன தலைவர் கிருபாகரன் சென்னையில் தமிழக முதல்வரை சந்தித்தபோது நமது இயக்கத்திற்கு வாழ்த்து தெரிவித்ததோடு, சிறப்பாக பணியாற்றுங்கள் என கூறினார். இப்போது நமது கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் எடுத்த தீர்மானங்களான தென் மாவட்டங்களில் திமுக தலைமையிலான கூட்டணியின் வெற்றிக்கு அயராது பாடுபடுவோம் என்றும், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெற்றிபெற உறுதுணையாக இருப்பதோடு, நிலக்கோட்டை தொகுதியில் தனி கவனம் செலுத்தி திமுகவின் கோட்டையாக மாற்ற அயராது பாடுபடுவோம் என தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

அதன் பின்னர் நிருபர்கள் மத்தியில் பேசிய நிறுவன தலைவர் கிருபாகரன், நமது இயக்கத்தின் கொள்கை தலைவராக இருக்கும் தென்பாண்டி சிங்கம், ஆத்தூர் தொகுதியின் கொடை வள்ளல், மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐயா ஐ.பெரியசாமி அவர்களின் வழிகாட்டுதலின்படி 2026 சட்டமன்ற தேர்தலில் தேர்தல் பணியாற்ற உள்ளோம் என்றார். கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் பார்த்திபன், சக்திசரவணன், தினகரன், சிலம்பரசன், லோகேஸ்வரன், நேதாஜி உட்பட தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிறைவாக மாநில தொண்டரணி தலைவர் சதீஸ்குமார் நன்றி கூறினார்.

# எதிரிகளின் கப்பல்களை தவிர மற்ற அனைத்தும் ஹார்முஸ் வழியாக செல்லலாம்

## ட்ரம்ப் கெடுவுக்கு ஈரான் பதில்

தெஹ்ரான், மார்ச்.23-

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் செல்ல அனுமதிப்பது குறித்த தனது கெடுபிடியை ஈரான் தளர்த்தியுள்ளது. எதிரி நாடுகளுடன் தொடர்புடைய கப்பல்கள் தவிர, மற்ற அனைத்து கப்பல்களுக்கும் இந்த நீர்வழிப்பாதை திறந்தே இருக்கும் என்று ஐ.நா.வின் ஈரான் பிரதிநிதி தெரிவித்தார்.



முன்னதாக, 48 மணி நேரத்திற்குள் இந்த ஹார்முஸ் ஜலசந்தி முழுமையாகத் திறக்கப்படாவிட்டால் ஈரானிய மின் உற்பத்தி நிலையங்களைத் தாக்கி அழிப்போம் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கெடு விதித்திருந்தார். அதற்கு உடனடியாக ஈரானும் கடுமையாக எதிர்வினையாற்றியது. ஆனால், சில மணி நேரங்களுக்குப் பிறகு, ஈரான் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்த அறிவிப்பை வெளியிட்ட ஐ.நா..வின் சர்வதேச கடல்சார் அமைப்பிற்கான ஈரான் பிரதிநிதி அலி மூசாவி, “ஈரானின் எதிரிகளுடன் தொடர்பில்லாத கப்பல்கள், எங்களுடனான பாதுகாப்பு ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் ஹார்முஸ் நீர்வழிப்பாதையைக் கடந்து செல்லலாம்.

வளைகுடாவில் கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்தவும், மாலுமிகளைப் பாதுகாக்கவும் ஐ.நா. அமைப்புடன் ஒத்துழைக்க ஈரான் தயாராக உள்ளது. மேலும், ஹார்முஸ் ஜலசந்தியில் நிலவும் தற்போதைய சூழ்நிலைக்கு ஈரான் மீதான இஸ்ரேல் மற்றும் அமெரிக்கத் தாக்குதல்களே காரணம். ராஜதந்திரம் ஈரானின் முன்னுரிமையாக உள்ளது. இருப்பினும், ஆக்கிரமிப்பை முழுமையாக நிறுத்துவதும், பரஸ்பர நம்பிக்கையும் அதைவிட முக்கியமானவை” என்று மூசாவி கூறினார்.

உலகளாவிய எண்ணெய் மற்றும் எரிவாயுவில் ஐந்தில் ஒரு பங்கு கடந்து செல்லும் முக்கிய பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை, ஈரான் மூடியது. அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அவற்றின் கூட்டாளிகளுக்கு ஹார்முஸ் வழியாக ஒரு லிட்டர் எண்ணெய் கூட சென்றடைய அனுமதிக்க மாட்டோம் என்றும் ஈரான் கூறியது.

ஹார்முஸ் ஜலசந்தியில் பயணிக்கும் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்க ஒரு கடற்படைக் கூட்டணியை உருவாக்க ட்ரம்ப் முயன்று வருகிறார். ஆனால், ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட விரும்பவில்லை என பெரும்பாலான நேட்டோ நட்பு நாடுகள் தெரிவித்துவிட்டன. இதனால் ட்ரம்ப் கடும் அதிருப்தியில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய அளவில் தமிழக விளையாட்டுத்துறையை மேம்படுத்தியவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

## வண்ணம்பட்டியில் மின்னொளி கபாடி போட்டியை துவக்கிவைத்து அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி, மார்ச். 23-

இந்திய அளவில் தமிழக விளையாட்டுத்துறையை மேம்படுத்தியவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் என்று வண்ணம்பட்டியில் மின்னொளி கபாடி போட்டியை துவக்கிவைத்து அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், பாறைப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட வண்ணம்பட்டியில் வி.என்.பி.சி.சி., வி.என்.பி.ஸ்போர்ட்ஸ் கிளப் மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பாக 3ம் ஆண்டு மாநில அளவில் கபாடி போட்டிகள் நடைபெற்றது. வெள்ளி, சனி ஆகிய இரு நாட்கள் மின்னொளியில் நடைபெற்ற கபாடி போட்டிக்கு ஆத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி இராமன் தலைமை தாங்கினார். திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், வண்ணம்பட்டி கிளைச் செயலாளர் ராஜா, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் காணிக்கைசாமி, செல்வி காங்கேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமெச்சூர் கபடிக்குழு துணைத்தலைவர் ஆர்.கிட்டு (எ) கிருஷ்ணமூர்த்தி வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் கலந்து கொண்டு போட்டிகளை துவக்கிவைத்துவிட்டு பொதுமக்கள் மத்தியில்பேசும்போது தமிழக விளையாட்டுத்துறையை இந்திய அளவில் பேச வைத்தவர் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆவார். தமிழக முதல்வர் ஒருபடி மேலே போய் விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு கொடுத்ததினால் கிராமப்புற விளையாட்டு வீரர்கள் அரசு பணிகளில் சேர வாய்ப்பு கிடைத்துள்ளது. ஒரு விளையாட்டு சிறந்த மாணவனையும், சிறந்த விளையாட்டு வீரரையும் ஊக்குவிக்கும். இப்போது இங்குகூட கபாடி போட்டியில் பதக்கம் வென்ற பெண் ஒருவருக்கு வனத்துறையில் பணி கிடைத்தாக கூறினார்கள். மிக்க மகிழ்ச்சியடைகிறேன். பெண்களும் விளையாட்டு போட்டிகளில் சாதனை படைக்க வேண்டுமென வாழ்த்தினார். கபாடி விளையாட்டுப்போட்டிகளுக்கு நடுவர்களாக சர்வதேச நடுவர் யாகமுத்து, நாகராஜ், சிவானந்தம், கலையரசன், சரவணன், கிருஷ்ணமூர்த்தி, பிரபு ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேசன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் முருகன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லூர் சுபாஷ், ஒன்றிய விவசாயி அணி அமைப்பாளர் பாறைப்பட்டி கிருஷ்ணன், டாஸ்மாக் வடிவேலு உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# புதுச்சேரி தேர்தல்: தொகுதி பங்கீடு முடியாத சூழலில் தேர்தல் அலுவலகம் திறந்தார் நாராயணசாமி

புதுச்சேரி, மார்ச்.23-

தொகுதி பங்கீடு முடியாத சூழலில் கணபதி ஹோமத்துடன் தேர்தல் அலுவலகத்தை முன்னாள் முதல்வர் நாராயணசாமி திறந்தார். ஏற்கெனவே இத்தொகுதியில் திமுக வேட்பாளராக சுட்டிக்காட்டப்பட்டவர் மனுதாக்கல் செய்த நிலையில் நாராயணசாமி இத்தொகுதியில் போட்டியிடுகிறாரா என கேள்வி எழுந்துள்ளது.

புதுவையில் இண்டியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் திமுக இடையே தொகுதி பங்கீடு இன்னும் முடிவு அடையாமல் இழுபறியாக உள்ளது. தொகுதி எண்ணிக்கை, கூட்டணி தலைமை ஆகியவற்றில் இரு கட்சிகளும் விடாப்பிடியாக இருக்கின்றன. நாளை வேட்புமனு தாக்கல் நிறைவடையும் நிலையிலும் இன்னும் கூட்டணி முடிவடையாமல் உள்ளது.



திமுக கடந்தமுறை போட்டியிட்ட சில தொகுதிகளில் காங்கிரஸும், காங்கிரஸ் போட்டியிட்ட தொகுதிகளில் திமுகவும் இந்த முறை போட்டியிட விரும்புகின்றன. இதுவும் தொகுதி பங்கீடு நிறைவடையாமல் இழுபறியில் இருக்க காரணம் ஆகும்.

நெல்லித்தோப்பில் கடந்த முறை திமுக போட்டியிட்டு குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தது. இந்த தொகுதியில் முன்னாள் முதல்வர் நாராயணசாமி காங்கிரஸ் சார்பில் போட்டியிட தேர்தல் பணியை செய்து வந்தார். இச்சூழலில் அண்மையில் ஓபிஎஸ் உடன் அவரது ஆதரவாளரான முன்னாள் எம்எல்ஏ ஓம்சக்தி சேகர் திமுகவில் இணைந்தார். அவர் வேட்பு மனுவும் தாக்கல் செய்துள்ளார். திமுகவில் போட்டியிட உள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

தற்போது கூட்டணியே இழுபறியாக இருக்கும் நிலையில் இன்று காலை நெல்லித்தோப்பு கான்வென்ட் வீதியில் கட்சி தேர்தல் அலுவலகத்தை நாராயணசாமி திறந்துள்ளார். அதிகாலை 4.30 மணிக்கு கணபதி பூஜை செய்தார். முன்னாள் முதல்வர் நாராயணசாமி அவருக்கு நெருக்கமானவர்கள் பங்கேற்றனர்.

தொடர்ந்து காலை 9 மணிக்கு நெல்லித்தோப்பு காங்கிரஸ் நிர்வாகிகள் உடன் ஆலோசனையும் நடத்தினார். அதிகாரப்பூர்வமாக தொகுதி பங்கீடு நிறைவடையாத சூழலில், முன்னாள் முதல்வர் நாராயணசாமி தேர்தல் அலுவலகம் திறந்தது என்பது, யார் இத்தொகுதியில் போட்டியிடுவார்கள் என்ற கேள்வியை அதிகப்படுத்தியுள்ளது



# இளம் வாக்காளர்களைக் கவர மார்க்சிஸ்ட் தேர்தல் வாக்குறுதி

## மேற்கு வங்க தேர்தல்

கொல்கத்தா, மார்ச். 23-

மேற்கு வங்கத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினரும், கட்சியின் மூத்த தலைவருமான சமிக் லஹிரி நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இளைஞர்களின் வாக்குகளைக் குறிவைத்து அதிக அளவு வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்று தேர்தல் அறிக்கையில் அறிவிக்க இருக்கிறோம். இந்தத் தேர்தலில் ஏராளமான புதிய வாக்காளர்கள் பட்டியலில் இணைந்துள்ளனர். அவர்களைக் குறிவைத்தே எங்களது தேர்தல் அறிக்கை இருக்கும்.

கடந்த 15 ஆண்டு காலமாக திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியில் மாநிலம் பின்னோக்கிச் சென்றுவிட்டது. வேலைவாய்ப்பின்மை தலைவிரித்து ஆடி வருகிறது. மாநிலத்தில் வேலைவாய்ப்பே இல்லை. பணித்திறன் மிக்க இளைஞர்கள் மாநிலத்தில் இருந்தும் அவர்களுக்கு உரிய வேலை கிடைக்கவில்லை. தேர்தல் அறிக்கையில், மாற்று வேலைவாய்ப்புக் கொள்கையை அறிவிக்க இருக்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தேர்தல் நேரத்தில் பொறுப்பு எதுவும் இல்லாமல் எப்படி செயல்பட முடியும்? சரத்குமார் ஆதங்கம்

சென்னை, மார்ச்.23-

“பாஜகவில் நான் இணைந்தபோது தேசிய அளவில் பொறுப்பு வழங்கப்படும் என உறுதியளித்தார்கள். சமகவை பாஜகவில் இணைக்காமல், தனிக்கட்சியாகவே இயக்கியிருக்கலாம் என எனது ஆதரவாளர்கள் வருத்தப்படுகின்றனர். நான் அதிருப்தியில் இல்லை, ஆதங்கத்தில் உள்ளேன். தேர்தல் நேரத்தில் பொறுப்பு எதுவும் இல்லாமல் எப்படி செயல்பட முடியும்?.” என சரத்குமார் தெரிவித்தார்.



சென்னையில் இன்று பாஜக நிர்வாகி சரத்குமார் தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தினார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், “இன்று இங்கே வந்துள்ளவர்கள் அனைவரும் என்னுடன் 30 ஆண்டுகளாக பயணித்தவர்கள். அவர்கள் இன்று என்னிடம் தங்களின் ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர். அதற்கு ‘பொறுத்தார் பூமி ஆள்வார்’ என பதிலளித்திருந்தேன்.

இதனால் நான் பாஜகவிலிருந்து விலகப்போவதாக பலர் செய்திகளை வெளியிட்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து இன்று என் ஆதரவாளர்களை சந்தித்தேன். அவர்கள் என்னை சந்தித்த போது, எனக்கு (சரத்குமார்) இதுவரை எந்த பொறுப்பும் வழங்கவில்லை என்ற தங்களின் ஆதங்கத்தை தெரிவித்தனர். அதற்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது.

எனது ஆதரவாளர்களில் 19 மாநில நிர்வாகிகளுக்கு பாஜக சார்பில் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் நேரத்தில் எங்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டால்தான் சிறப்பாக செயல்பட முடியும் என்று அவர்கள் கூறினார். தங்கள் தலைவருக்கு பொறுப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் தெரிவித்தனர். ஏன் சமத்துவ மக்கள் கட்சியை மீண்டும் தொடங்கக் கூடாது என்றும் அவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

நான் இவற்றை ஒரு வேண்டுகோள் கடிதமாக தேசிய தலைமைக்கும், மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனுக்கும் அனுப்ப உள்ளேன். அந்தக் கடிதத்தில், எனக்கு பொறுப்பு வழங்கப்படாதது குறித்த ஆதங்கத்தை குறிப்பிடுவோம். மேலும், பொறுப்பு வழங்கப்படாதது குறித்து எனக்கும் ஆதங்கம் உள்ளது.

17 ஆண்டுகளாக அரசியல் களத்தில் இருந்த எனது புகைப்படம் திருச்சி மாநாட்டு மேடையில் இடம்பெறவில்லை என என் ஆதரவாளர்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். முக்கியமான பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தால் என் புகைப்படம் இடம்பெற்றிருக்கும் என்றும் அவர்கள் கூறினர். தேர்தல் நேரத்தில் பொறுப்பு எதுவும் இல்லாமல் எப்படி செயல்பட முடியும்?.

பாஜகவில் நான் இணைந்தபோது தேசிய அளவில் பொறுப்பு வழங்கப்படும் என உறுதியளித்தார்கள். நான் ஒரு மாநிலத் தலைவராக இருந்தால், ஒருவரின் பலம் அறிந்து அவருக்கு பொறுப்பு வழங்கி கட்சியில் இணைத்திருப்பேன். கட்சியில் சேர வைத்து காக்கவைத்தது தவறு என நினைக்கிறேன்.

தற்போது எனக்கான பொறுப்பு வழங்கப்பட வேண்டுமென தலைமையிடம் வேண்டுகோள் வைக்க முடிவு செய்துள்ளேன். அவர்கள் நிச்சயம் எங்கள் கோரிக்கைக்கு செவிசாய்ப்பார்கள் என்று நம்புகிறேன். அதனால் தற்சமயம் சமகவை புதுப்பிக்கும் எண்ணம் இல்லை. ஆனாலும் பொறுப்பு இல்லாமல் செயல்பட முடியாது. எனவே பொறுப்புகள் வழங்கப்படுவது அவசியம்.

நான் மோடிஜியின் மீது உள்ள மதிப்பினால்தான் பாஜகவில் இணைந்தேன். 2026 தேர்தலில் நானும், எனது மனைவி ராதிகாவும் போட்டியிட மாட்டோம். தலைமை சொன்னால் கூட நான் போட்டியிட மாட்டேன். என்னோடு பயணித்த திறமையானவர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டுமென ஒரு பட்டியலை வழங்கியுள்ளேன். நான் அரசியல்ரீதியாக திமுகவிடம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. நான் அதிருப்தியில் இல்லை, ஆதங்கத்தில் உள்ளேன்.

நல்ல தலைவர்களை ஆதரிக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். தவெகவை பற்றி எனக்கு மதிப்பீடு ஒன்றுமே கிடையாது, அவர் தலைவனே கிடையாது. சமகவை பாஜகவில் இணைக்காமல், தனிக்கட்சியாகவே இயக்கியிருக்கலாம் என எனது ஆதரவாளர்கள் வருத்தப்படுகின்றனர்.” எனத் தெரிவித்தார்

## வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட

# வாக்குச்சாவடி மையங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு



தென்காசி, மார்ச்.23-

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்., இ.ஆ.ப., அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வீரசிகாமணி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, புளியங்குடி பரமானந்தா நடுநிலைப்பள்ளி, ஆர்.சி மேல்நிலைப்பள்ளி, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் சாகிப் நினைவு நடுநிலைப்பள்ளி, சிந்தாமணி சீனியம்மாள் உயர்நிலைப்பள்ளி ஆகிய வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அனைத்து வாக்குச்சாவடி மையங்களில் உள்ள குறைபாடுகளை சரிசெய்து தேர்தல் பணிக்கு தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும் என அலுவலர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், வாசுதேவநல்லூர் தேர்தல் நடத்தும் அலுவலர் பால்துரை, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அப்துல் சமது, புளியங்குடி நகராட்சி ஆணையாளர் விஜயகுமார் மற்றும் தலைமையாசிரியர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# ஆர்.பி.உதயகுமாரின் தேர்தல் பணிகளை தடுக்க ஆளுங்கட்சி முயற்சி: அதிமுக குற்றச்சாட்டு



மதுரை, மார்ச்.23-

முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமாரின் தேர்தல் பணியை தடுக்க, அதிகாரிகள் மூலம் ஆளுங்கட்சியினர் அச்சுறுத்துகின்றனர் என அதிமுக வழக்கறிஞர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி மதுரை திருமங்கலம் தொகுதியில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ளார். இந்நிலையில் அவரின் தேர்தல் பணியை தடுக்கும் வகையில் டி.குண்ணத்தூரிலுள்ள அம்மா கோயில் மற்றும் அங்குள்ள அதிமுக அலுவலகத்தில் தேர்தல் பிரிவு பறக்கும்படை அதிகாரிகள் மற்றும் காவல்துறையினர் தொடர்ந்து 5 முறைக்கு மேல் சோதனை நடத்தியுள்ளதாகவும், ஆளுங்கட்சியின் தூண்டுதலின் பேரில் அதிமுகவின் தேர்தல் பணிக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக இச்சோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அதிமுகவினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

இது குறித்து அதிமுகவின் வழக்கறிஞர் பிரிவு நிர்வாகிகள் கூறியதாவது: ஒவ்வொரு நாளும் தேர்தல் பணி குறித்து முன்னாள் அமைச்சர் தலைமையில் ஆலோசனை நடக்கும் நேரத்தில் இடையூறு ஏற்படுத்தும் வகையிலும், தேர்தல் பணியை தடுக்கும் விதமாகவும் ஆளுங்கட்சியான திமுகவின் நிர்பந்தத்தின் பேரில் அம்மா கோயிலில் தேர்தல் அதிகாரிகள், காவல்துறையினர் சோதனை நடத்துகின்றனர்.

இதுவரை 5 முறை சோதனை நடத்தினாலும், எவ்வித பொருட்களும் அவர்கள் எடுக்க முடியவில்லை.எங்களது தேர்தல் பணியை தடுக்கும் வகையில் ஆளுங்கட்சியினர் அதிகார துஷ்பிரயோகம் செய்து அதிகாரிகளை நிர்பந்தம் செய்கின்றனர். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களின் இடங்கள், அலுவலகங்களில் இது போன்ற சோதனை நடத்துவதில்லை.

இதுபோன்ற மறைமுக மிரட்டலால் அதிமுகவின் தேர்தல் பணிகளை யாராலும் முடக்க முடியாது. எங்கள் மடியில் கனமில்லை, பயமும் இல்லை.தேர்தல் அதிகாரிகள் நியாயமான முறையில் செயல்பட வேண்டும். ஆளுங்கட்சியின் கைப்பாவையாக அதிகாரிகள் மாறி விடக்கூடாது. ஏதாவது கிடைத்தால் வழக்கு போடலாம் என அதிகாரிகள் முயற்சிக்கின்றனர், அது ஒருபோதும் நடக்காது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# மேற்காசிய போர் எதிரொலி இலங்கையில் பெட்ரோல், டீசல் விலை 25% ஏற்றம்




கொழும்பு, மார்ச். 23-

தீவு தேசமான இலங்கையில் பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் உள்ளிட்ட எரிபொருளின் விலை சுமார் 25 சதவீதம் ஏற்றம் கண்டுள்ளது. தற்போது அங்கு ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.398 க்கு விற்பனை ஆகிறது.

கடந்த வாரம்தான் இலங்கையில் பெட்ரோல், டீசல் விலையை சுமார் 8 சதவீதம் உயர்த்தி இருந்தது இலங்கை அரசு. அதோடு தட்டுப்பாடு காரணமாக எரிபொருள் விநியோகத்தின் சில்லறை விற்பனையில் சில கட்டுப்பாடுகளை அந்நாட்டு அரசு அமல் செய்தது. இந்த சூழலில் மீண்டும் அங்கு எரிபொருள் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இந்த முறை எரிபொருள் மீதான விலையேற்றம் 25 முதல் 30 சதவீதம் என்ற அளவில் உயர்ந்துள்ளது.

மேற்காசியாவில் அமெரிக்கா இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் கடந்த மாதம் 28ம் தேதி தொடங்கியது. இதனால் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக எரிபொருள் கொண்டு வரும் சரக்கு கப்பல்களின் போக்குவரத்து முடங்கியது. இதனால் கச்சா எண்ணெய், எரிவாயு உள்ளிட்டவற்றின் விநியோகம் உலக அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த போர் காரணமாக இலங்கையில் இரண்டாவது முறையாக எரிபொருள் விலை உயர்ந்துள்ளது. இதை இலங்கை அரசின் நிறுவனமான சிலோன் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் உறுதி செய்துள்ளது.

மேற்காசிய போர் காரணமாக உலக அளவில் கச்சா எண்ணெய் மீதான விலை ஏற்றம் கண்டுள்ளது. அதன் காரணமாக இலங்கையில் இன்று முதல் எரிபொருளின் விலை 25 முதல் 30 சதவீதம் வரை உயர்த்தப்படுகிறது என சிலோன் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் அறிவித்துள்ளது. தங்கள் நாட்டுக்கு தேவையான பெட்ரோலியம் பொருட்களை இலங்கை இறக்குமதி செய்து வருவது குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூர், மலேசியா, தென் கொரியா மற்றும் ஈரானில் இருந்து இந்த பொருட்களை இலங்கை பெறுகிறது. தற்போது போர் காரணமாக அந்த விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. மின்சார உற்பத்திக்கு தேவையான நிலக்கரியையும் இலங்கை இறக்குமதி செய்து வருகிறது.

இலங்கையில் பெட்ரோல் விலை: தற்போது இலங்கையில் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.82 உயர்ந்து, ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.398க்கு விற்பனை ஆகிறது. இதேபோல் டீசல் விலை லிட்டருக்கு ரூ.79 உயர்ந்து, ஒரு லிட்டர் டீசல் ரூ.382க்கு விற்பனை செய்யப்படுகிறது. மண்ணெண்ணெய் விலை லிட்டருக்கு ரூ.60 உயர்ந்து, ஒரு லிட்டர் ரூ.255க்கு விற்பனை ஆகிறது.

கரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு கடந்த 2022 ல் இலங்கை பெரிய அளவில் பொருளாதார பாதிப்பை சந்தித்தது. அப்போது இலங்கைக்கு வந்து கொண்டிருந்த அந்நியச் செலாவணி வரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அதனால் இலங்கையின் நாணயம் பெரிய அளவில் மதிப்பிழந்தது. மேலும், கடுமையான எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டது. நிலக்கரி வாங்க பணம் இல்லாததால் இலங்கை இருளில் மூழ்கியது. அப்போது பெட்ரோல், டீசல் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்தது. தற்போதைய விலையேற்றம் மீண்டும் அதை நினைவுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.



# தமிழகத்தில் மார்ச் 26 வரை அதிகபட்ச வெப்பநிலை 5 டிகிரி உயர வாய்ப்பு

## வானிலை முன்னறிவிப்பு

சென்னை, மார்ச்.23-

தமிழகத்தில் நாளை முதல் மார்ச் 26ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட ஓரிரு இடங்களில் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மன்னார் வளைகுடா முதல் தெற்கு மத்திய மகாராஷ்டிரா வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளையும் (மார்ச் 23), நாளை மறுதினமும் கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். 25, 26 தேதிகளில் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 27, 28 தேதிகளில் கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் மார்ச் 26ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட ஓரிரு இடங்களில் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 95 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 79 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் கீழ்கோத்தகிரி எஸ்டேட்டில் 6 செமீ, தேனி மாவட்டம் சோத்துப்பாறையில் 4 செமீ, தென்காசி மாவட்டம் குண்டாறு அணை, தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர், அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஆகிய இடங்களில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# திருப்பதி தேவஸ்தான கோயில்கள் அனைத்தும் அதிநவீன ஆன்மிக மையங்களாக வளர்ச்சி பெற வேண்டும்

## சந்திரபாபு நாயுடு உத்தரவு



திருமலை, மார்ச். 23-

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று தனது குடும்பத்தாருடன் திருப்பதி ஏழுமலையானை தரிசித்தார்.

அப்போது அவர் தனது பேரன் நாரா தேவான்ஷின் பிறந்த நாளையொட்டி, திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் எஸ்.வி. அன்னதான அறக்கட்டளைக்கு ஒருநாள் அன்னதான செலவான ரூ.44 லட்சத்துக்கான காணிக்கையை வழங்கினார். சுவாமியை தரிசித்த பின்னர் அவருக்கு ரங்கநாயக மண்டபத்தில் அதிகாரிகள் தீர்த்த பிரசாதங்கள் வழங்கி கவுரவித்தனர்.

அதன் பின்னர், சந்திரபாபு நாயுடு, தனது மனைவி புவனேஸ்வரி, மகனும் அமைச்சருமான நாரா லோகேஷ், மருமகள் பிராம்மனி மற்றும் பேரன் நாரா தேவான்ஷ் ஆகியோருடன் இணைந்து தரிகொண்டா வெங்கமாம்பாள் அன்னதான கூடத்திற்கு சென்றார். அங்கு, பக்தர்களுக்கு காலை சிற்றுண்டியை சந்திரபாபு நாயுடு மற்றும் அவரது குடும்பத்தினர் பரிமாரியதுடன், பக்தர்களுடன் இணைந்து உண்டனர்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று, திருமலையில் 12 ஆயிரம் சதுர அடியில் ரூ.25 கோடியில் கட்டப்பட்ட அதிநவீன உணவு மற்றும் நீர் பரிசோதன மையத்தை திறந்து வைத்தார். திருமலையில் செயற்கை நுண்ணறிவு கமாண்ட் கண்ட்ரோல் மையத்தை அவர் ஆய்வு செய்தார்.

அப்போது அவர் பேசுகையில், ''திருமலைக்கு ஏழுமலையானை தரிசிக்க வரும் பக்தர்கள் எதிர் கொள்ளும் சங்கடங்களை முன்கூட்டியே ஏஐ மூலம் கண்டறிந்து உடனுக்குடன் தீர்த்து வைக்க வேண்டும். திருப்பதி தேவஸ்தானத்தின் அனைத்து கோயில்களும் ஒரு அதிநவீன ஆன்மிக மையங்களாக செயல்பட வேண்டும்'' என்றார்

# ஈரான் கச்சா எண்ணெய் மீதான தடை ஒரு மாதம் நீக்கம்



வாஷிங்டன், மார்ச். 23-

ஈரான் போர் காரணமாக கச்சா எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு 70 அமெரிக்க டாலரிலிருந்து 119 டாலர் வரை உயர்ந்தது. இதை குறைக்கும் முயற்சியாக ஈரான் கச்சா எண்ணெய் மீதான தடையை ஒரு மாத காலத்துக்கு நீக்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க நிதியமைச்சர் ஸ்காட் பெசன்ட் கூறும்போது, ''ஈரான் கச்சா எண்ணெய் மீதான தடை ஒரு மாத காலம் நீக்கப்பட்டிருப்பது தற்காலிக நடவடிக்கை. இதன்மூலம் 140 மில்லியன் பீப்பாய் கச்சா எண்ணெயை சர்வதேச சந்தையில் ஈரான் விற்க முடியும்.

இது ஈரான் ஏற்கெனவே விற்பனைக்காக கப்பலில் ஏற்றி வைத்துள்ள கச்சா எண்ணெய்க்கு மட்டுமே பொருந்தும். புதிதாக வாங்கவோ அல்லது உற்பத்தி செய்யவோ அனுமதிக்க வில்லை. இந்த தடை நீக்கம் ஈரான் கச்சா எண்ணெய் விநியோகத்தில் ஏற்படுத்திய தற்காலிக அழுத்தத்தை குறைக்க உதவும்'' என்றார்.

இதனால் ஈரான் விற்கும் கச்சா எண்ணெயை சீனா குறைந்த விலைக்கு வாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஈரான் அரசு கூறுகையில், ''தற்போதைய நிலையில், சர்வதேச சந்தைகளுக்கு விற்பனை செய்வதற்காக கப்பல்களில் ஏற்றப்பட்டுள்ள கச்சா எண்ணெயோ உபரி எண்ணெய் கையிருப்போ இல்லை'' என தெரிவித்துள்ளது.

தாக்குதல் அதிகரிக்கும்: ஈரான் மீதான தாக்குதலை குறைப்பது குறித்து பரிசீலித்து வருவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நேற்று தெரிவித்தார். அதேநேரம் இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் கூறும்போது, ''ஈரான் மீதான அமெரிக்க இஸ்ரேல் படைகளின் தாக்குதல் இந்த வாரம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரிக்கும்'' என்றார்.

# பெங்களூர், மும்பையில் இருந்து வந்த எக்ஸ்பிரஸ் ரயில்களில் ரூ.14 லட்சம் மதிப்பு தங்கம், 28 கிலோ கஞ்சா பறிமுதல்

## ரயில்வே பாதுகாப்பு படை அதிரடி




தண்டையார்பேட்டை, மார்ச். 23-

தமிழ்நாட்டில் அடுத்த மாதம் சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு, வெளிமாநிலத்திலிருந்து சென்னை சென்ட்ரலுக்கு வரும் ரயில்கள், சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து வெளிமாநிலத்திற்கு செல்லும் ரயில்களை ரயில்வே பாதுகாப்பு படை போலீசார் தீவிர சோதனை நடத்தி உரிய ஆவணமின்றி கொண்டுவரப்படும் பணம், பரிசு பொருள், போதை பொருட்களை பறிமுதல் செய்து வருகிறார்கள்.

அதனடிப்படையில் நேற்று பெங்களூரில் இருந்து சென்னை சென்ட்ரல் நோக்கி வந்த லால்பாக் எக்ஸ்பிரஸ் ரயிலில் ரயில்வே பாதுகாப்பு படை போலீசார் சோதனை நடத்தினர். அப்போது, சந்தேகப்படும்படி ஒருவர் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது, அதில் உரிய ஆவணமின்றி 13 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 94 கிராம் தங்கம், 4 லட்சத்து 98 ஆயிரத்து 400 ரூபாய் இருந்தது என்பதும், இந்த பணத்தை எடுத்து வந்தது தணிகைவேல் (57) என்பதும் தெரியவந்தது. இவரிடம் இருந்து தங்கம் மற்றும் பணம் பறிமுதல் செய்யப்பட்டு, நுங்கம்பாக்கத்தில் உள்ள வருமான வரித்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இதுபோல் மும்பையில் இருந்து சென்ட்ரலுக்கு வந்த எக்ஸ்பிரஸ் ரயில் பெரம்பூரில் நின்றபோது, அதிலிருந்து இறங்கி சென்றவரை பிடித்து விசாரணை செய்தபோது, நந்தகுமார் (29) என்பதும், உரிய ஆவணமின்றி 5 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் வைத்திருந்ததும் தெரியவந்தது. இதுபோல் புருலியாடு பகுதியில் இருந்து திருநெல்வேலி செல்லும் எக்ஸ்பிரஸ் ரயிலில், திருவொற்றியூர் எண்ணூர் இடையே முன்பதிவு இல்லா பெட்டியில் ரயில்வே பாதுகாப்பு படை போலீசார் சோதனை நடத்தினர். அப்போது, கேட்பாரற்று கிடந்த 10 பண்டலை எடுத்து சோதனை செய்தபோது, 12 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 25 கிலோ கஞ்சா இருந்தது தெரியவந்தது.

இதுபோல் அரக்கோணம் செல்லும் ரயிலில் முன்பதிவு செய்யப்படாத பெட்டியில் 3 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட பணம், தங்க நகைகள் நுங்கம்பாக்கத்தில் உள்ள வருமான வரித்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. கஞ்சா, போதை தடுப்பு பிரிவு போலீசில் ஒப்படைக்கப்பட்டது. போலீசார் வழக்குப்பதிவு செய்து கஞ்சா வைத்திருந்தது யார்? என பல்வேறு கோணங்களில் விசாரித்து வருகின்றனர். இதுபோல் தொடர்ந்து ரயில்களில் சோதனை நடத்தப்பட்டு உரிய ஆவணமின்றி கொண்டுவரும் பரிசு பொருட்கள், பணம், போதைப பொருட்கள் பறிமுதல் செய்யப்படும் என ரயில்வே பாதுகாப்பு படை போலீசார் தெரிவித்துள்ளனர்

# சர்வதேச கடல்வழிப் பாதை முடக்கத்தால் இந்தியாவில் உரத் தட்டுப்பாடு அபாயம்..?

## விலை உயர வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பாதிப்பு




புதுடெல்லி, மார்ச். 23-

சர்வதேச கடல்வழிப் பாதையில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து முடக்கத்தால் நாட்டின் உர இறக்குமதி மற்றும் உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே மோதல்கள் காரணமாக கடந்த பிப். 28ம் ததி முதல் இன்றுடன் 23 நாட்களாக ஹார்முஸ் ஜலசந்திப் பகுதி முழுமையாக முடக்கப்பட்டுள்ளது. அதனால் கச்சா எண்ணெய் மட்டுமின்றி இந்தியாவின் உரத்துறைக்குத் தேவையான மூலப்பொருட்களைக் கொண்டு வருவதில் 'லாஜிஸ்டிக்ஸ்' ரீதியாகப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

கடந்த 15ம் தேதி நிலவரப்படி, சுமார் 70 முதல் 80 சதவீதம் வரை கப்பல் போக்குவரத்து குறைந்துள்ளது. இதனால் சர்வதேச அளவில் யூரியா உள்ளிட்ட உரங்களின் விலை 30 முதல் 40 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை டிஏபி உரத் தேவையில் 60 சதவீதத்திற்கும் அதிகமான அளவை ஓமன், சவுதி அரேபியா, கத்தார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய வளைகுடா நாடுகளிடம் இருந்தே இறக்குமதி செய்கிறது. அதேபோல், உள்நாட்டில் 80 சதவீத யூரியா உற்பத்தி செய்யப்பட்டாலும், அதற்குத் தேவையான 86 சதவீத எல்என்ஜி எரிவாயு வளைகுடா நாடுகளில் இருந்தே வருகிறது. தற்போது இந்தப் போக்குவரத்து முடங்கியுள்ளதால், கத்தார் எனர்ஜி நிறுவனம் தனது ஏற்றுமதியில் 'போர்ஸ் மெஜூர்' (கட்டுப்பாடற்ற சூழல்) நிலையை அறிவித்துள்ளது.

இதனால் மொராக்கோ மற்றும் ரஷ்யாவில் இருந்து வரும் சரக்குக் கப்பல்கள், ஆப்பிரிக்காவின் 'கேப் ஆப் குட் ஹோப்' வழியாகச் சுற்றி வரவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இது போக்குவரத்து செலவையும், நேரத்தையும் பலமடங்கு அதிகரித்துள்ளது. இது குறித்துத் துறை சார்ந்த வல்லுநர்கள் கூறுகையில், 'தற்போதைய சூழலில் இந்தியாவிடம் போதிய கையிருப்பு இருப்பதால் உடனடி உரத் தட்டுப்பாடு வராது. இருப்பினும், வரும் கோடைகால சாகுபடி சீசனுக்குத் தேவையான உரங்களை விநியோகிப்பதில் நீண்டகால திட்டம் ஒன்றை வகுக்க வேண்டியது அவசியம்' என்று தெரிவித்தார்.

தற்போதைய நிலவரப்படி, ஒன்றிய அரசு சுமார் 18.01 மில்லியன் டன் உரத்தை இருப்பு வைத்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 36.6 சதவீதம் அதிகமாகும். மே மாதம் பாதியளவு வரை இந்த இருப்பு போதுமானதாக இருக்கும் என்றாலும், அதற்குள் போர் பதற்றம் தணியாவிட்டால் விவசாயிகளுக்கு உரம் கிடைப்பதில் பெரும் சிரமம் ஏற்படும் என அஞ்சப்படுகிறது

# புதுச்சேரி தேர்தல் காரைக்கால் தெற்கு பாஜக வேட்பாளராக அருள்முருகன் அறிவிப்பு



புதுச்சேரி, மார்ச்.23-

புதுச்சேரியில் பாஜக போட்டியிடும் 10வது தொகுதியான காரைக்கால் தெற்கு வேட்பாளராக அருள்முருகன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

புதுச்சேரியில் என்டிஏ கூட்டணியில் என்ஆர்காங்கிரஸுக்கு 16 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. மீதமுள்ள 14 தொகுதிகளில் 10 தொகுதிகள் பாஜகவுக்கும், அதிமுக, லஜகவுக்கு தலா 2 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டன. அதையடுத்து பாஜக 9 தொகுதி வேட்பாளர்களை அறிவித்தது. பத்தாவது தொகுதியான காரைக்கால் தெற்கு வேட்பாளராக மாநில தலைமை செய்தி தொடர்பாளர் அருள்முருகனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய பொதுச்செயலர் அருண்சிங் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதைத்தொடர்ந்து அருள்முருகனுக்கு கட்சியின் அதிகாரப்பூர்வ தேர்தல் படிவங்களை இன்று அளித்தனர்.

என்டிஏ கூட்டணியில் அறிவித்து பத்து தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அதிகாரப்பூர்வமாக பாஜக மட்டுமே அறிவித்துள்ளது. இதில் அறிவிப்புக்கு முன்பாகவே அமைச்சர் நமச்சிவாயம், பேரவைத்தலைவர் செல்வம் உள்ளிட்டோர் மனுதாக்கல் செய்துவிட்டனர். மீதமுள்ளோர் நாளை மனுதாக்கல் செய்கின்றனர்.

# 4,000 கி.மீ தூர இலக்கை தாக்கும் ஏவுகணையை வீசிய ஈரான்

## அமெரிக்கா, இங்கிலாந்து அதிர்ச்சி



டெஹ்ரான், மார்ச்.23-

ஈரானில் இருந்து 4,000 கி.மீ தொலைவில் உள்ள டியாகோ கார்சியா தீவில் அமெரிக்க மற்றும் இங்கிலாந்து ராணுவ முகாம் மீது ஏவுகணை வீசி உலக நாடுகளை மிரளவைத்துள்ளது ஈரான்.

ஈரான் தன்னிடம் 2,000 கி.மீ. தூரம் உள்ள இலக்கை தாக்கும் ஏவுகணைகள் உள்ளன என்றுதான் இதுவரை உலகுக்கு அறிவித்திருந்தது. ஆனால், ஈரானிலிருந்து 4,000 கி.மீ. தொலைவில், இந்திய பெருங்கடல் பகுதியில் இருக்கும் டியாகோ கார்சியோ தீவு மீது ஏவுகணைகளை வீசி உலக நாடுகளை மிரட்டியுள்ளது. இந்த தீவில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ராணுவ முகாம் உள்ளது. இங்குதான் அமெரிக்காவின் குண்டு வீச்சு விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த தீவை நோக்கி ஈரான் 2 நடுத்தர ரக ஏவுகணைகளை வீசியுள்ளது. இதில் ஒரு ஏவுகணை தோல்வியடைந்து விட்டது. ஒரு ஏவுகணையை அமெரிக்கா எம்எம்3 ஏவுகணை மூலம் இடைமறித்து அழித்ததாக கூறப்படுகிறது. இதன் மூலம் ஈரான் போர் இந்தியப் பெருங்கடல் பகுதி வரை விரிவடைந்துள்ளது.

ஈரானின் இந்த தொலைதூர தாக்குதல் அமெரிக்கா, இஸ்ரேல், வளைகுடா நாடுகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் வான் பாதுகாப்பு கருவிகளை பல இடங்களில் அமைக்க வேண்டிய நெருக்கடி நிலைக்கும் இந்த நாடுகள் ஆளாகியுள்ளன.



## அலங்காநல்லூர்கேட்டுகடை கம்மாளப்பட்டி கிராமத்தில்

# இந்து சமய அறநிலைத்துறைக்கு கட்டுப்பட்ட ஸ்ரீதேவி பூதேவி சமேத பெருமாள் திருக்கோவில் கும்பாபிஷேகம்

அலங்காநல்லூர். மார்ச். 23-

மதுரை மாவட்டம். அலங்காநல்லூர் கேட்டுகடை கம்மாளப்பட்டிகிராமத்தில் இந்து சமய அறநிலையத்துறைக்குகட்டுப்பட்ட ஸ்ரீதேவி ஸ்ரீ பூதேவி சமேத பெருமாள் திருக்கோவில் கும்பாபிஷேகம்

நடைபெற்றது. விழாவில் முதல் நாள் யாக வேள்வி பூஜையில் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோமம், பூர்ணாஹூதி மங்கல இசை முழங்க கோபூஜை, கணபதி பூஜை மற்றும் தீபாதாரணையும் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து இரண்டாம் நாள் காலை மங்கல இசை முழங்க மகா பூர்ணாஹூதி, தீபாராதனை நடைபெற்றது. ராமேஸ்வரம், அழகர்கோவில், காசி, கங்கை, உள்ளிட்ட திருத்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் மேளதாளங்கள் முழங்க யாகசாலையைவலம் சுற்றி வந்து கோவில் கருவறையில் அமைந்துள்ள சுவாமிகளுக்கு வேத மந்திரங்கள் முழங்க கருடன் வானத்தில் வட்டமிட புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தந்த உள்ளூர் மற்றும் சுற்று வட்டார கிராமத்தை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பூஜை பொருட்களும், அன்னதானமும் வழங்கப்பட்டது.

விழா ஏற்பாடுகளை திருக்கோவில் அறங்காவலர் மற்றும் இந்து சமய அறநிலைத்துறை ஆய்வாளர் அலங்காநல்லூர் கிராம பொதுமக்கள்செய்திருந்தனர்.இந்த கும்பாபிஷேக நிகழ்ச்சியில் திருவேங்கடம் மற்றும் ராமச்சந்திர பட்டராச்சாரியார்கள்குழுவினர் கலந் து கொண்டனர்.



■ புதுச்சேரி மாநிலம் செல்லிப்பட்டு பகுதியில் கத்தியை காட்டு மிரளவைத்த 3 பேர் கைது செல்லிப்பட்டு பகுதியில் பொதுமக்களிடம் கத்தியை காட்டி மிரட்டிய சம்பவத்தில் ,கொடுக்கூர் அய்யனார் மகன் குணசேகரன், கூடப்பாக்கம் சதாசிவம் மகன் தொல்காப்பியன், கல்த்திரம்பட்டு ராஜேஷ்குமார் மகன் ஆனந்தராஜ் ஆகிய மூன்று பேரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்



# கோட்டைமேடு கிராமத்தில் ஸ்ரீ முத்தம்மாள்கோவில் கும்பாபிஷேகம் விழா

அலங்காநல்லூர். மார்ச். 23-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கோட்டைமேடு கிராமத்தில்சித்திரை நாயக்கர் வகையறாவுக்கு பாத்தியப்பட்ட

ஸ்ரீ முத்தம்மாள் கோவில் கும்பாபிஷேகம்நடைபெற்றது. விழாவில் முதல் நாள் யாக வேள்வி பூஜையில் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோமம், பூர்ணாஹூதி மங்கல இசை முழங்க கோபூஜை, கணபதி பூஜை மற்றும் தீபாதாரணையும் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து இரண்டாம் நாள் காலை மங்கல இசை முழங்க மகா பூர்ணாஹூதி, தீபாராதனை நடைபெற்றது. ராமேஸ்வரம், அழகர்கோவில், காசி, கங்கை, உள்ளிட்ட திருத்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் மேளதாளங்கள் முழங்க யாகசாலையை

வலம் சுற்றி வந்து வேத மந்திரங்கள் முழங்க கருடன் வானத்தில் வட்டமிட கோவில் கலசத்திற்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.பின்னர் கருவறையில் அமைந்துள்ள அம்மனுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு அலங்காரம் மற்றும் தீபாதாரணையும் நடைபெற்றது.கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தந்த உள்ளூர் மற்றும் சுற்று வட்டார கிராமத்தை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பூஜை பொருட்களும், அன்னதானமும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளைசித்திரை நாயக்கர் வகையறாக்கள் மற்றும் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.



















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000